செ.வெ.எண்.44 நாள்.15.08.2017.

**திருநெல்வேலி மாவட்டம்**
**பாளையங்கோட்டை ஒன்றியம் இராஜவள்ளிபுரம், கிராமத்தில் 71வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.**

---------

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 425 கிராம ஊராட்சிகளிலும் 71 வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு சிறப்பு கிராமசபை கூட்டம் இன்று 15.08.2017 நடைபெற்றது. பாளையங்கோட்டை வட்டம், இராஜவள்ளிபுரம்,ஊராட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், இராஜவள்ளிபுரம் ஊராட்சி பெரியவர் திரு.ஆர்.எம்.பொன்னுசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் இன்று (15.08.2017) சிறப்பு கிராமசபை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில்,குடிநீர் சிக்கனமாக உபயோகித்தல்,கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்,கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட அறிக்கையினை கிராம சபை கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுதல்,கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்,ஊராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்படவிருக்கும் ஊராட்சி வளர்ச்சி திட்டப் பணிகளுக்கான திட்ட அறிக்கையினை கிராம சபைக் சுகூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பொறுதல்,அனைத்து ஊராட்சிகளிலும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்துதல்,திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான தகவல் தெரிவித்தல்,மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் வகைப்பாட்டினை கிராம சபைக் கூட்டத்தில் ஒப்புதல் பெறுதல்,ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல்,மகளிர் திட்ட செயல்பாடுகள் குறித்து விவாதித்தல்,கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் செயல்பாடுகள் குறித்த அறிக்கைகள்.விவாதிக்கபட்டது

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலமாக தகுதிபெற்ற இளைஞர்களுக்கு (18 முதல் 35 வயதுடையவர்கள்) வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி குறித்து விவாதித்தல்,அரசு மூலமாக தனிநபர் கழிப்பறை திட்டம் குறித்து அனைத்து மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அனைவரது வீட்டிலும் கழிப்பறைக் கட்ட ஏற்பாடு செய்தல்,ஊராட்சி மன்றத் தனி அலுவலரால் கொண்டு வரப்படும் இதர பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது—

சுதந்திர தினத்தினை முன்னிட்டு, நாடு முழுவதும் கிராமசபை கூட்டங்கள் நடத்தப்படுகிறது. கிராம கணக்குகளை தணிக்கை செய்வதற்கும், கிராம வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை தேர்ந்தெடுப்பதற்கும் பொதுமக்களிடம் ஒப்புதல் பெறுவதற்காக கிராமசபை கூட்டங்கள் நடத்தப்படுகிறது. ராஜவள்ளிபுரம் ஊராட்சியில் இன்னும் 140 தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்ட

வேண்டியுள்ளது. 71வது சுதந்திரத்தை நாம் கொண்டாடும் வேளையில் 6000 மக்கள் தொகை கொண்ட இந்த ஊராட்சியில் சுமார் 600 மக்கள் திறந்த வெளியில் மலம் கழிப்பது என்பது மிகவும் சுகாதார கேடாகும். இன்னும் 3 மாதத்தில் நமது மாவட்டத்தில் உள்ள எல்லாம் இல்லங்களிலும் தனி நபர் கழிப்பிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கிராமத்திலும் அனைத்து இல்லங்களிலும் கழிப்பிடங்களை கட்டி ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

மேலும் சுகாதார கிராமங்களுக்கு பரிசு வழங்கும் திருநெல்வேலி சுகாதார போட்டி அறிவிக்கபட்டுள்ளது. 100 சதவீத இல்லத்தில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு திறந்த வெளி கழிப்பிடங்கள் இல்லாமலும் குப்பைகளை தரம் பிரித்து.சுகாதாரமாக அப்புறப்படுத்தவும, சுத்தமான சுகாதாரமான கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு அக்கிராமத்தின் வளர்ச்சிக்காக ரூ.20 லட்சம் வழங்கப்படும். தமிழக அரசு கிராமபுற வளர்ச்சிக்கு தேவையான பல திட்டங்களை தீட்டி வழங்கி வருகிறது. திருநெல்வேலி மாவட்டம் தூய்மையான மாவட்டமாக திகழ்ந்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பொது மக்கள் அணைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில்,உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்.இ.ஆ.ப., திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி மைதிலி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, வேளாண்மைத்துறை இனை இயக்குனர் திரு.கனகராஜ்,மாவட்ட வழஙகல் அலுவலர் திரு.புன்னியகோட்டி,மகளிர் திட்ட இயக்குநர் திருமதி கெட்சி லீமா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யான சுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, திருநெல்வேலி வட்டாச்சியர் திரு.கணேசன்,பாளையங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள்திருமதி ஆறுமுககனி, திருமதி சன்முகதாய்,ராஜவள்ளிபுரம் ஊராட்சி செயலர் திரு.சங்கர் மற்றும் அனைத்துதுறை அலுவலர்கள் மற்றும் ஊர்பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.